**In the Court of the Subordinate Judge, Srivaikundam.**

Case.No.OS. 54/2023

Deposition of D.W.3

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பெருமாள் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 07th day of July 2026.

**முதல்விசாரணை :**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பாக்கியத்தாயம்மாளின் மருமகன். எனது மனைவி கலாமணி வசந்தா, பாக்கியத்தாயம்மாளின் மகள். பாக்கியத்தாயம்மாள் எந்த தேதியில் உயில் ஆவணம் பிறப்பித்து வைத்துள்ளார் என்றால் அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார், போன இடத்தில் உறவினர்கள் வந்திருந்தார்கள், கூட்டமாக இருந்தது, நான் பார்த்துவிட்டு வெளியே வந்தேன். அங்கு வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.

**பிரதிவாதி தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கும்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154 மற்றும் உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவு 151ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ்சாட்சியாக தீர்மானித்து சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

பாக்கியத்தாயம்மாள் 13.04.2006ம் தேதி எழுதி வைத்த உயில் சாட்சி ஆவணத்தில் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்துள்ளது 2வது சாட்சியான முத்தையாவுக்கு தெரியும் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்தபோது பாக்கியத்தாயம்மாள் பார்த்து கொண்டிருந்தார்

என்றால்சரிதான், அவருக்கு தெரியும் என்றால் சரிதான். பாக்கியத்தாயம்மாள் கையொப்பம் செய்யும்போது நானும், முத்தையாவும் பார்த்தோம் என்றால் சரிதான். முத்தையா 2வதாக கையொப்பம் செய்யும்போது நானும், பாக்கியத்தாயம்மாள் பார்த்தோம் என்றால் அது எனக்கு தெரியாது. உயில் ஆவணம் எழுதியபோது பாக்கியத்தாயம்மாள் ஆரோக்கியமான நல்ல மனநிலையில் இருந்தார் என்றால் அவர் உயில் எழுதியது எனக்கு தெரியாது. பாக்கியத்தாயம்மாள் நடக்க முடியாது காரணத்தால் சார்பதிவாளர் வீட்டிற்கு வரவழைத்து என் முன்னிலையிலும், முத்தையா முன்னிலையிலும் உயில் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகள் என்னை கைவச படுத்தியதால் பாக்கியத்தாயம்மாள் நல்ல மனநிலைமையில் இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

எனக்கு சொந்தஊர் ஆறுமுகநேரி. பாக்கியத்தாயம்மாள் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் எனது மைத்துனர் எனக்கு தெரியப்படுத்தினார். பாக்கியத்தாயம்மாள் இரண்டு பையன்கள், 6 பெண்பிள்ளைகள். ஜெயமாணிக்கம் இறப்பதற்கு முன்பு தூத்துக்குடியில் வசித்துவந்தார். பாக்கியத்தாயம்மாளின் மற்ற பெண்பிள்ளைகளின் என் மனைவி என்னுடன் ஆறுமுகநேரியில் இருக்கிறார். ஒரு பெண் உள்ளூரில் இருக்கிறார். ஒரு பெண் தென்காசியில் இருக்கிறார். ஒரு பெண் தூத்துக்குடியில் இருக்கிறார். பாக்கியத்தாயம்மாள் உடல்நிலை சரியில்லை என்று எங்களை அழைத்துபோது அன்றையதேதியில் யார் யார் இருந்தார்கள் என்றால் வளர்மதி, என் மனைவி, குமாரி, ராஜாத்தி, சரோஜினி மற்றும் பக்கத்துவீட்டார்கள், உறவினர்கள் இருந்தார்கள். ஜெயமாணிக்கம் இருந்தாரா என்றால் ஆமாம் இருந்தார். பாக்கியத்தாயம்மாள் அன்றையதினம் என்ன நிலைமையில் இருந்தார் என்றால் உணர்வு இல்லாமல் இருந்தார், நான் பார்த்தவுடன் வெளியே வந்துவிட்டேன். என்னிடத்தில் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில்

எதற்காக கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியாது, நான் படித்து பார்க்கவில்லை, யாரும் படித்து காண்பிக்கவில்லை, ஜெயமாணிக்கம்தான் கையொப்பம் வாங்கினார். பாக்கியத்தாயம்மாள் உயில் ஆவணம் எழுத போவதாகவும், அதில் என்னை சாட்சியாக கையொப்பம் செய்யும்படி சொல்லி வர சொன்னாரா என்றால் இல்லை. அன்றையதேதியில் மருத்துவர்கள் இருந்தார்களா என்றால் இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/கைரேகை செய்யப்பட்டது.

BARSAD BEGUM A Digitally signed by BARSAD BEGUM A

**சார்பு நீதிபதி,**
**திருவைகுண்டம்.**